**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.6, திருச்சிராப்பள்ளி**
**முன்னிலை: திரு.M.S.சுப்பிரமணியன், B.B.A.B.L.,**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.6,**
**திருச்சிராப்பள்ளி.**
**2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 04 ஆம் நாள் சனிக்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 44/2022**

| | |
|---|---|
| அரசுக்காக<br>காவல் உதவி ஆய்வாளர்<br>திருவெறும்பூர், காவல் நிலையம்<br>குற்ற எண். 83/2021 | ...... குற்றமுறையீட்டாளர் |
| /எதிர்/ | |
| 1. விஷ்ணு (எ) வெங்கடேஷ், வயது 26<br>த/பெ. சாமிக்கண்ணு<br>எண்.55, செல்வபுரம், 2வது தெரு,<br>ரயில்வே கேட், திருவெறும்பூர்,<br>திருச்சி.<br><br>2.தினேஷ்குமார் (எ) பாட்டில் மணி,<br>வயது 29, கீழகணபதி நகர், கைலாசபுரம்,<br>திருச்சி மாவட்டம்.<br><br>3. சுரேஷ்,வயது 28,<br>த/பெ. குமார் (எ) போலீஸ்குமார்),<br>எண்.25, 8வது தெரு, காந்தி நகர்,<br>திருவெறும்பூர், திருச்சி. | ......... எதிரிகள் |

**<u>சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021ம் தேதியிட்ட R.O.C.No.814/ 2020/RG/F1ன் படி வழக்கின் சுருக்கம்</u>**

| | | | |
|---|---|---|---|
| 01. | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாள் | : | 1வது எதிரி 29.09.2025ம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | தேதி கைது செய்யப்பட்டு, 13.10.2025ம் தேதி பிணையில் சென்றுள்ளார். 2வது எதிரி இந்த வழக்கில் சேலம் மத்திய சிறையில் சிறைவாசியாக உள்ளார். 3வது எதிரி 14.02.2021ம் தேதி கைது செய்யப்பட்டு, 19.02.2021ம் தேதி பிணையில் சென்றுள்ளார். |
| 02. | இறுதிஅறிக்கை நீதிமன்றத்தில்தாக்கல்செய்யப்பட்டநாள் | | | : | 25.01.2021 |
| 03. | முதன்மை பதிவேட்டு வழக்கு மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள் | | | : | -- |
| 04. | எதிரியிடம் கு.வி.மு.ச 251 பிரிவின் கீழ் வினவிய நாள் | | | : | 16.03.2026 |
| 05. | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பல்வகை மனுக்களின் விவரம் | | | : | |
| | குற்றப் பல்வகை மனு எண். | உத்தரவு அனுமதிக்கப்பட்டது/தள்ளுபடி செய்யப்பட்டது. | மேல்முறையீட்டு வழக்கு விவரம் | | |
| | 1. Crmp.No.<br>U/s sec 320 (2) crpc | | -- | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2.Crmp.No.<br>U/s sec 294(3) crpc<br><br>3.Crmp.No. 234 /2026<br>U/s sec 311 crpc | | --<br><br>--- | | |
| 06. | சாட்சிகள் விசாரித்த நாட்களின் விவரம்: | | | : | |
| | சாட்சிகள் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் | | |
| | அ.சா.1 | 06.06.2026 | இல்லை | | |
| | அ.சா.2 | 06.06.2026 | இல்லை | | |
| | அ.சா.3. | 16.06.2026 | இல்லை | | |
| | அ.சா.4 | 16.06.2026 | இல்லை | | |
| | அ.சா.5 | 23.06.2026 | 23.06.2026 | | |
| 07. | எதிரியிடம் கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவப்பட்ட நாள் | | | : | 30.06.2026 |
| 08. | எதிரி தலைமறைவு ஆகிய நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகிய/ஆஜர்படுத்தப்பட்ட நாட்கள் | | | : | -- |
| 09. | மாண்புமிகு மேலமை நீதிமன்றத்தின் உத்தரவு படி வழக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால் அதன் விவரம் மற்றும் தீர்வு | | | : | -- |

இவ்வழக்கு 12.01.2022 அன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசுத்தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்களும் எதிரி தரப்பில் திருமதி. N.அனுசியா.,B.A.B.L., அவர்கள் ஆஜராகியும், 2வது எதிரி இவ்வழக்கில் சேலம் மத்திய சிறையில் சிறைவாசியாக உள்ளார். 3வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.A.ஓம்பிரகாஷ்.,B.A.B.L.,அவர்கள் ஆஜராகியும், இறுதி விசாரணைக்கு வந்தும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

**<u>அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் :-</u>**

வாதி சந்தோஷ்குமார் என்பவர் 25.01.2021ம் தேதி காலை 09.00 மணியளவில் வாதியும் தனது நண்பர்களான யுவராஜ் மற்றும் மோகன் ஆகிய மூவரும் சொந்த வேலையாக திருவெறும்பூர் கடை வீதி அய்யர் கடை சந்து தஞ்சாவூர் to திருச்சி ரோடு அருகே நின்று கொண்டிருந்த போது அப்போது அங்கு வந்த இவ்வழக்கின் எதிரிகள் விஷ்ணு (எ) வெங்கடேஷ் 2. பாட்டில்மணி (எ) தினேஷ்குமார், ஆகியோர்கள் வாதியின் அருகே வந்து யாருடா நிங்க இங்க நிக்கிறீங்க என்று கேட்டு வாதியும் அவரது நண்பர்களும் இந்த ஏரியாதான் அதை ஏன் நீங்க கேட்குற என்று கேட்டபோது நாங்க யாருனு தெரியாதா நாங்க தான் திருவெறும்பூரில் பெரிய ரவுடிங்க என்று கூறி பாக்கெட்டில் பணம் எவ்வளவு வச்சிருக்கிங்க தண்ணி அடிக்கனும் பணத்த கொடுங்கடா என்று மிரட்டியபோது வாதி நீங்கள் யாரா வேனுமானாலும் இருங்க பணமெல்லாம் தர முடியாது என்று சொன்னபோது எதிரி விஷ்ணு தன்னுடைய பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த ஒரு கத்தியை எடுத்து வாதியின் நெஞ்சில் வைத்து பணத்தை கொடுங்கடா இல்லாட்டி இந்த கத்தியாலேய உங்கள குத்தி கொன்னுடுவோம் என்று மூவரும் மிரட்டிய போது வாதி தன் சட்டை மேல் பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.500/- ஐ அவர்களிடம் எடுத்துக் கொடுத்துள்ளார். மேற்படி எதிரிகளின் இச்செய்கையானது சட்டப்பிரிவுகள் 387, 506 (ii) IPC படி

தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்ததாக திருவெறும்பூர் காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. குற்றப்பத்திரிக்கையை பரிசீலனை செய்து கோப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு, வழக்கு எண் வழங்கப்பட்டது. எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி அதன்மூலம் எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானார். எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிகள் மீது இதச பிரிவு 387, 506 (ii) IPC ன் கீழ் குற்றம் பற்றி வினவிய போதும், வனைந்து தமிழில் விளக்கி கூறியபோதும், எதிரிகள் தங்கள் மீதான குற்றங்களை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை எனக் கூறினார்கள். எனவே அரசுத்தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4. இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5.அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சுருக்கம் பின்வருமாறு:-**

5.1.) அ.சா.1 சந்தோஷ்குமார் தனது சாட்சியத்தில், தான் டிரைவராக வேலை பார்த்து திருவெறும்பூரில் வசித்து வருவதாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தனக்கு தெரியாது என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் படிவம் 91-ல் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும் போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5.2) அ.சா.2 ராஜா முகமது தனது சாட்சியத்தில், தான் திருவெறும்பூரில் வசித்து, டிபன் கடை நடத்தி வருவதாகவும், தான் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு போலிசார் தன்னிடம் கையொப்பம் கேட்டதாகவும், தான் கையெழுத்து போட்டதாகவும், அதில் என்ன விபரம் இருந்தது என்று தனக்கு தெரியாது என்றும், **பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும்,** போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

5.3) அ.சா.3 யுவராஜ் தனது சாட்சியத்தில், தான் திருச்சி, திருவெறும்பூரில் வசித்து வந்து ஹோட்டல் வைத்து தொழில் செய்து வருவதாகவும், . புகார்தாரர் சந்தோஷ்குமார் தனது நண்பர் தான் என்றும், ஆஜர் எதிரியை தான் பார்த்துள்ளதாகவும், எதிரிகள் சுரேஷ், விஷ்ணுவை தெரியும் என்றும், வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், எந்த சம்பவத்தையும் தான் நேரில் பார்க்கவில்லை என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

5.4) அ.சா.4 மோகன் தனது சாட்சியத்தில், தான் திருச்சி, திருவெறும்பூரில் வசித்து வந்து டிபன் கடை வைத்து தொழில் செய்து வருவதாகவும், புகார்தாரர் சந்தோஷ்குமார் தனது நண்பர் தான் என்றும், ஆஜர் எதிரியை தான் பார்த்துள்ளதாகவும், எதிரிகள் சுரேஷ், விஷ்ணுவை தெரியும் என்றும் வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. எந்த சம்பவத்தையும் தான் நேரில் பார்க்கவில்லை என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

5.5) அ.சா.5 முருகேசன் தனது சாட்சியத்தில், அ.சா.5 முருகேசன் தனது சாட்சியத்தில், தான் தற்போது சார்பு ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தஞ்சாவூரில் வசித்து வருவதாகவும், ஆய்வாளராக பணியாற்றி வந்த போது சந்தோஷ்குமார் என்பவர் நேரில் ஆஜராகி எதிரிகள் பயன்படுத்திய கத்தி மற்றும் தன்னிடம் பறித்த ரூ.500 உடன் புகார் கொடுத்தார். அந்த புகாரை பெற்று குற்ற எண். 23/2021 ச/பி 387, 506(ii) IPC

பிரிவுகளின் கீழ் எதிரிகள் விஷ்ணு, மணி, சுரேஷ் ஆகியோர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், **வாதி கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும்,** சாட்சியம் அளித்துள்ளார்.

5.6) மேலும் அ.சா.5 தனது சாட்சியத்தில், அவர் தனது பிறந்த தேதியை மாற்றி போலியான ஆவணங்களை பயன்படுத்தி A12144939 என்ற பாஸ்போர்ட்டை எடுத்து மலேசியா சென்றதாகவும், மலேசியாவில் ஓவர் ஸ்டே செய்து தொடர்ந்து வேலை பார்த்தேன் என்றும், பின்பு அபராதம் கட்டி EC Passport மூலம் இந்தியா வந்தேன் என்றும், பின்னர் 2017 வருடம் மலேசியா செவதற்காக வயது அதிகமான காரணத்தால் உண்மையான பிறந்த தேதியான 03.06.1973 என்பதை 03.06.1980 என மாற்றி R5788470 (21.11.2017 முதல் 20.11.2027) என்று பாஸ்போர்ட் எடுத்து மலேசியா சென்றதாகவும், இந்நிலையில் மீண்டும் மலேசியா செல்வதற்காக வந்த போது தான் பிடிப்பட்டதாக குற்றத்தை ஒப்புக்கொண்டதாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

5.7) மேலும் அ.சா.5 தனது சாட்சியத்தில், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜா முகமது மற்றும் பாலு ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார்ள செய்துள்ளதாகவும், **பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும்,** பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் கடந்த 25.01.2021ம் தேதி 1 வது எதிரி விஷ்ணுவை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும், 2, 3 எதிரிகளை சம்பிராய கைது செய்து இந்த வழக்கில் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தாகவும், இந்த வழக்கு சொத்துக்களான கத்தி மற்றும் பணம் ரூ. 500/- ஐக படிவம் 91-ன்மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், (**படிவம் 91 அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், மடக்கு கத்தி அ.சா.பொ. 1 மற்றும் ரூ. 500/- அ.சா.பொ.2 ஆக குறியீடு** செய்யப்பட்டுள்ளதாகவும், பின்னர் சாட்சிகள் யுவராஜ், மோகன், ராஜமாணிக்கம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பெற்றதாகவும், இறுதியில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால்

எதிரிகள் மீது அதே பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை கடந்த 09.03.2021ம் தேதி தாக்கல் செய்துள்ளதாகவும், சாட்சிகள் தனது விசாரணையில் சம்பவத்தை பற்றி கூறியுள்ளார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

6. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றிய சங்கதிகள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச 313(1)(ஆ)ன் கீழ் குற்றம் பற்றி வினவியபோது, பொய் சாட்சி என்றும் தன் தரப்பில் விசாரிக்க சாட்சி ஏதுமில்லை என்றும் கூறினார்கள்.

7. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

**<u>8. தீர்க்கப்படவேண்டிய பிரச்சனை :–</u>**

இவ்வழக்கில் எதிரிகள் மீது இதச பிரிவு 387, 506 (ii) IPC –ன் படி சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் படியான குற்றங்களை எதிரிகள் தான் புரிந்தார்கள் என சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு அரசுத்தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை பரிசீலனை செய்வதே இவ்வழக்கின் பிரச்சனையாகும்.

09.1). இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து அரசுதரப்பு சாட்சியங்களை பரிசீலனை செய்து பார்த்தபொழுது இவ்வழக்கில் அ.சா.1 தனது முதல் விசாரணையில் எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தனக்கு தெரியாது என்றும், அ.சா.2 தனது விசாரணையில், கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு போலிசார் தன்னிடம் கையொப்பம் கேட்டதாகவும், தான் கையெழுத்து போட்டதாகவும், அதில் என்ன விபரம் இருந்தது என்று தனக்கு தெரியாது என்றும், **பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.**

அ.சா.1 மற்றும் அ.சா.2ன் சாட்சியத்தை ஒத்துரைத்தே அ.சா.3 மற்றும் அ.சா.4ம் சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.1 முதல் அ.சா.4 வரையான சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளதால் அ.சா,1 முதல் அ.சா.4 வரையான சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யவில்லை. எனவே எதிரிகளுக்கு எதிரான புகார் அரசுதரப்பில் நிரூபிக்கப்படவில்லை.

09.2) இவ்வழக்கில் புலன்விசாரணை அதிகாரிக்காக சாட்சியம் அளித்துள்ள தற்போதைய சார்பு ஆய்வாளரின் சாட்சியம் எதிரிகளை குற்றத்தோடு தொடர்புபடுத்தும் வகையில் அமைந்திருந்தாலும் அரசுத்தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் அ.சா.4 வரையான சாட்சிகள் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியமளித்துள்ள நிலையிலும், வேறு தனி நபர் சாட்சிகள் யாரும் அரசு தரப்பிற்கு வலுவூட்டும் வகையில் சாட்சியமளிக்காததாலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிக்காக சாட்சியம் அளித்துள்ள அ.சா.5ன் சாட்சியத்தை மட்டுமே வைத்து எதிரிகள் தான் குற்றம் புரிந்திருப்பார்கள் என்று தீர்மானிப்பது நீதியின் நலனுக்கும், இயற்கை நியதிக்கும் உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**10. முடிவாக, 1 முதல் 3 எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 387, 506 (ii) IPC –ன் படியான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்று கருதி எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து கு.வி.மு.ச.பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது.**

11. **இவ்வழக்கு சொத்தான (RP.No.116/2021) மடக்கு கத்தி ஒன்று மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது. பணம் ரூ.500/– யை அதன் உரிமையாளர் CRMP.No.6756/2021 என்ற மனுவின் உத்தரவுப்படி மனுதாரர் பெற்றுச்சென்றுள்ளார். மேல்முறையீட்டு காலத்திற்கு பின் மனுதாரர் அந்த பணத்தை நிரந்தரமாக வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. எதிரிகளால் இவ்வழக்கிற்கு கொடுக்கப்பட்ட பிணைப்பத்திரத்தை ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.**

இந்த தீர்ப்புரையானது என்னால் கணினி இயக்குநருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 04 ஆம் நாள் அன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M S SUBRAMANIAN
Digitally signed by M S SUBRAMANIAN
Date: 2026.07.04 12:05:14 +0530

நீதித்துறை நடுவர் எண்.6
திருச்சிராப்பள்ளி.

**1. அரசுத்தரப்பு சாட்சிகள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | – | திரு.சந்தோஷ்குமார் |
| அ.சா.2 | – | திரு.ராஜா முகமது |
| அ.சா.3 | – | திரு.யுவராஜ் |
| அ.சா.4 | – | திரு.மோகன் |
| அ.சா.5 | – | திரு.முருகேசன்.(காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் ) |

**2. அரசுத்தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 25.01.2021 | பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம். |
| அ.சா.ஆ.2 | 25.01.2021 | புகார்மனு |
| அ.சா.ஆ.3 | 25.01.2021 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 25.01.2021 | மகஜர் |
| அ.சா.ஆ.5 | 25.01.2021 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 25.01.2021 | படிவம் –91 |

**3.அரசு தரப்பு சான்றுபொருட்கள்:-**

**1. அ.சா.பொ.1 – மடக்கு கத்தி**

**2.அ.சா.பொ.2– பணம் ரூ.500/–**

**4. எதிரிகள் தரப்பு சாட்சி :–** இல்லை

M S SUBRAMANIAN

Digitally signed by M S SUBRAMANIAN
Date: 2026.07.04 12:05:22 +0530

நீதித்துறை நடுவர் எண்.6
திருச்சிராப்பள்ளி.

**குறிப்பு :**

1. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. எந்தவொரு சாட்சியும் மூன்று முறைக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.